# செய்தி வெளியீடு

## குழும வளர்ச்சி நிர்வாகிகள் – 5 நாள் பயிற்சி கருத்தரங்கு

தமிழ்நாடு அரசின் தன்னாட்சி சேவை நிறுவனமான தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது (EDII-TN) 2001 ஆம் ஆண்டில் தமிழக அரசால் துவங்கப்பட்டது. இச்சேவை நிறுவனம் மூலமாக சிறு, குறு தொழில் முனைவோருக்கும், புதிதாக தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்களுக்கும், ஊக்கமளிக்கும் வகையில் மாநிலம் முழுவதும் தொடர் கருத்தமர்வுகள், தொடர் பயிற்சி பட்டறைகள், அனுபவ பகிர்வு மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்குகளை மேற்கொண்டு வருகிறது.

அகமதாபாத்தில் செயல்படும் இந்தியா அளவிலான தொழில் முனைவோர் மேம்பாடு நிறுவமானது (EDII- India, Ahmedabad) தேசிய அளவிலான நிதி நிறுவனங்களால் அமைக்கப்பட்டு செயல்பட்டுவரும் ஒரு சேவை நிறுவனமாகும். அதிலும் குறிப்பாக ஒத்த தொழில் செய்வோர்களை ஒருங்கிணைக்கும் குழுமங்களை ஊக்குவிக்கும் பணிக்கு இந்நிறுவனமானது மிக முக்கியத்துவம் கொடுத்து பயிற்சி கொடுத்து வருகிறது.

தற்போது, சென்னை ஈக்காட்டுதாங்கலில் செயல்படும் தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது (EDII) 'குழும வளர்ச்சி நிர்வாகிகள்' என்ற தலைப்பில் ஐந்து நாட்கள் பயிற்சி கருத்தரங்கினை நடத்திட ஏற்பாடு செய்துள்ளது. குழும வளர்ச்சி துறையில் நிபுணத்துவம் வாய்ந்த (EDII India) பயிற்சியாளர்கள் இக்கருத்தமர்வுகளில் பயிற்சியளிக்க இருக்கிறார்கள். இக்கருத்தரங்கின் முக்கிய குறிக்கோளானது, தமிழகம் முழுவதும் உள்ள குழுமங்களுக்கு, அதன் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு அடிப்படையான கருத்துருக்களை கற்றுத் தருவதும், மேலும் சிறப்பாக குழுமங்களின் செயல்பாடுகள் அமைய உறுதுணையாக இருத்தல் சம்பந்தமான பயிற்சியினை தரும். மாநில அரசு துணை அலுவலர்கள் / வங்கியாளர்கள் / குழும நிர்வாக உறுப்பினர்கள் / ஆலோசகர்கள் போன்றோருக்கு இந்த பயிற்சியின் மூலம் குழுமம் பற்றிய புரிந்துணர்வு தெளிவடைதலும், மேற்கொண்டு தங்கள் துறை சார்ந்த குழுமங்களை கண்காணித்து ஆர்வமூட்டவும், தகுந்த நேரத்தில் ஆலோசனை கொடுக்கவும் உதவியாக அமையும்.

ஐந்து நாட்கள் (தங்கும் வசதி அற்ற) கருத்தரங்கானது மே மாதம் 2018 கடைசி வாரத்தில் தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன பயிரலங்கில் நடத்திட திட்டமிட்டுள்ளது. இதன் பங்கேற்பாளர் கட்டணம் ரூ.5000/– ஆகும். (இது 70% மானிய தொகைக்கு பின்). இப்பயிற்சியில் பங்குகொள்வோர் முன்பதிவு செய்து கொள்ள வேண்டியது கட்டாயம். மேற்கொண்டு விவரம் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:திரு.V.D.ஆனந்தன், துணை இயக்குநர், EDII, சென்னை, கைபேசி எண்: 8668102090,மின்னஞ்சல் : ddcdp@editn.in

முன் பதிவு செய்யவேண்டிய கடைசி நாள்: மே 15 2018.

மேலும் விவரங்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள

இணையதள முகவரியைக் காணவும்: www.editn.in

Web:www.editn.in, E-mail: dir@editn.in Fbk: https://www.facebook.com/EDITamiNadu/
Twt: https://twitter.com/edichennaitn,https://twitter.com/StartupTNGOV
Tel:+91-44-2225-2081/82/83/84,Fax:+91-44-2225-2085